Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BODINAYAKANUR

19.10.2022

**STC No. 13/2022**

Depositions of - செல்லப்பாண்டி .witness for ...Petitioner side Witness 2

| | | |
|---|---|---|
| Name | - | செல்லப்பாண்டி (PW- 2) |
| Father's and Husband's name | - | முருகன் |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.04.2024.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**( எதிரி ஆஜர். )**

**குறுக்கு விசாரணை**

தற்போது எனக்கு வயது எத்தனை என்றால் 26 வயது. புகார்தாரரை தெரியுமா என்றால் தெரியும், அவருக்கு வயது எத்தனை என்றால் தெரியாது. புகார்தாரர் என்னைவிட 10 வயது மூத்தவராக இருப்பாரா என்றால் இருப்பார். வெங்கடாச்சலமும், நானும் சொந்தகாரர் என்றால் நண்பர்கள் மற்றும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். வெங்கடாச்சலத்தை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் பத்து வருடங்களாக தெரியும். வெங்கடாச்சலத்துடைய தோட்டத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடாச்சலத்திற்கு எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி நிலத்திற்கு சர்வீஸ்

மோட்டார் எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்த வருடம், எந்த தேதியில் விற்றார் என்றால் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்பு வீட்டை விற்ற பணத்தை கையில் வைத்திருந்தார், தோட்டம் எதுவும் விற்கவில்லை . நான் எனது முதல்விசாரணையில் தோட்டம் விற்று பணம் வைத்திருந்தார் என்ற சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். வெங்கடாச்சலம் வீடு விற்றதாக சொல்லும் ஆவணத்தில் நான் எதுவும் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. எதிரி குடியிருக்கும் வீட்டின் எண், தெரு பெயர் , வார்டு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான், வீடு மட்டும் எங்குள்ளது என்று மட்டும் தெரியும். எதிரி வெங்கடாச்சலத்திடம் பணம் வாங்கும் போது அந்த வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நான், மணி, சுரேஷ், வெங்கடாசலம் ஆகியோர் இருந்தோம், வெங்கடாலசத்தின் குடும்பத்தினர் யார் யார் இருந்தார்கள் என்றால் அவருடைய குடும்பத்தினரை பற்றி எனக்கு தெரியாது. வெங்கடாசலத்திற்கு குடும்பம் இருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியாக எனக்கு தெரியாது. எத்தனை கட்டுகளாக என்னென்ன தாள்கள் கொடுக்கப்பட்டது என்றால் 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுக்கப்பட்டது, 10 லட்சம் ரூபாய் இருப்பதாக சொல்லி எண்ணி வாங்கி சென்றார். புகார்தாரர் வெங்கடாச்சலம், அவரது மனுவிலோ, நோட்டிஸிலோ, தனது நிரூபண வாக்குமூலத்திலேயோ நான் உடன் இருந்ததாக கூறவில்லை என்றும், உண்மையிலேயே நான் இருந்திருந்தால் எனது பெயரை குறிப்பிட்டிருப்பார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பணம் கொடுக்கும் போது நான் உடன் இருந்ததாக சொல்வது முற்றிலும் பொய் என்றும் வாதி என்னை பொய் சாட்சியம் அளிப்பதற்காக அழைத்து வந்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. எத்தனை தடவை பணம் கொடுக்கும்போது நான் உடன் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் இரண்டு தடவை . தேதி என்ன என்றால் 21.11.2021, 28.11.2021 ஆகிய தேதிகளில் பணம் கொடுத்தார். எதிரியிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. 21ம் தேதி பணம் கொடுத்த விவரத்தை 28ம் தேதி பணம் வாங்கியதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன். மேற்படி எனது முதல்விசாரணையில் 21ம் தேதி பணம் கொடுத்த விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான்.

Taken down before me in Open Court,
and read over to the witness and
admitted by the deponent to be correct.

G K VELUMAYIL

Digitally signed by G K VELUMAYIL
Date: 2024.04.18 15:07:54 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.